**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**வத்திராயிருப்பு**

**அசல் வழக்கு எண். 161/2024**

**பி.வா.சா. 1**
**நாள் 12.11.2025**

**7–10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்குரை 1 முதல் 3 வரையிலான சொத்துகள் குறித்து எனது தகப்பனார் எங்களுக்கு தாயாருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் எங்களுக்கு தாயார் வழக்குரை சொத்துகளை அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் எங்களது தாயார் வழக்குரை 1 முதல் 3 வரையிலான சொத்துக்களை 2 கிரைய ஆவணங்களாக 3 வது பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கிரையங்கள் குறித்து வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த காலத்திலேயே தெரியும் என்று சொன்னால் சரிதான். 3 வது பிரதிவாதி கிரையம் செய்த பின்னர் வழக்கு சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்து வந்து அவரது காலத்திற்கு பின்னர் அவரது வாரிசுகளான 7 முதல் 10 பிரதிவாதிகள் அடைந்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். வழக்குரை 1 முதல் 3 வரையிலான சொத்துக்களில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் எங்களது தாயார் விற்பனை செய்து விட்டதால் எந்த உரிமையும் இல்லை.

தகப்பனார் சுப்ரமணிய பிள்ளை அவருடைய வாழ்நாளில் எத்தனை திருமணங்கள் செய்து கொண்டார் என்றால் இரண்டு திருமணங்கள் செய்து கொண்டார். எனது தகப்பனார் 3 திருமணங்கள் செய்து கொண்டார்

என்றால் சரியல்ல. தகப்பனார் சுப்ரமணிய பிள்ளைக்கு முதல் திருமணத்தின் பலனாக எத்தனை பெண் குழந்தைகள் மற்றும் எத்தனை ஆண் குழந்தைகள் உள்ளன என்றால் 3 பெண் குழந்தைகள் உள்ளனர். எனது தகப்பனாருக்கு முதல் திருமணத்தின் பலனாக பிறந்த குழந்தைகளுக்கு சொத்துக்கள் பிரித்து கொடுக்கப்பட்டுவிட்டன என்று வாதிகள் கூறியிருப்பது பொய் என்றால் பொய் தான்.

எனது தகப்பனாருக்கு 1 மற்றும் 3 வது திருமணம் மூலம் ஏற்பட்ட வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக வாதி சேர்க்காமல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வதாயார் இந்திராணி அம்மையார் திருப்பரங்குன்றத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். தாயாரை பார்ப்பதற்கு வாதிகள் வருவார்கள் என்றால் சரிதான். வழக்குரை 1 முதல் 3 வரையிலான சொத்துக்களை 3 வது பிரதிவாதி அனுபவம் செய்து வந்த விபரம் வாதிகளுக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்குரை 1 முதல் 3 வரையிலான சொத்துக்கள் 7 முதல் 10 வரைவிலான பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் அதில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு.